# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF JUDGE.
# KANNIYAKUMARI AT NAGERCOIL.
# E.A. NO.153/2017 in E.P No.78/2012

Deposition of the witness: PW1.
Date :10.02.2026

Solemnly affirmed by Mrs. R. Sathya Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | |
|---|---|
| Name | ஜாண் மில்டன் |
| Father's Name | அந்தோணி பிச்சை @மணி |
| Village | நாகர்கோவில் |
| Taluk | அகஸ்தீஸ்வரம் |
| Calling | மீன்தொழில் |
| Age | 53 |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்திற்கு நான் எழுத்து மூல பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வழக்கறிஞருக்கு நான் சொல்லி தயார் செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பின்பு கையொப்பம் செய்யப்பட்டது. கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 14.07.1993 | ராஜா பெயருக்கு எழுதி கொடுத்த கிரய ஆவணம் | சான்றிட்ட நகல் |

ஆவணம் குறியீடு செய்ய கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய தரப்பு ஆவணம் என்று ஆட்சேபனை செய்தார். மேற்படி ஆட்சேபனை படி குறியீடு செய்யப்படுகிறது.

எதிர்தரப்பு குறுக்கு விசாரணை

தற்போது நிறைவேற்று மனுவை தள்ளுபடி செய்ய மனுதாக்கல் செய்துள்ளேன் ஏற்கனவே இடைமனு எண்.147/99 இன் நிறைவேற்று மனு எண். 32/1988 என்ற மனுவை என் அம்மா தாக்கல் செய்ததில் நான் 3 வது மனுதாரராக இருந்துள்ளேன் என்றால் எனக்கு

தெரியாது. 2.11.2000 அன்று அந்த மனுவில் நான் ம.சா.1 ஆக மொழி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் மொழி கொடுத்த முதல் விசாரணை ஆவணம் என்றால் எனக்கு எழுத்துக்கள் தெரியவில்லை. அந்த முதல் விசாரணையில் அந்த வழக்கின் சொத்து வேறு என்றும் தற்போது நிலுவையில் உள்ள நிறைவேற்று மனு சொத்து வேறு என்றும் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை.

7.11.2000 அன்று மேற்படி வழக்கில் என்னை எதிர்தரப்பு குறுக்கு விசாரணை செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து என்னுடைய மொழியை நகல் எடுத்து காண்பித்தால் அது சம்பந்தமாக என்னால் சாட்சியம் அளிக்க முடியும். 22.06.2001 அன்று நான் தாக்கல் செய்த பிரிவு 47 ன் கீழான மனுவை இந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த உத்தரவுக்கு எதிராக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு தெரியாது. அந்த சீராய்வு மனுவானது 2011 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி விவரங்களை தெரிந்து கொண்டே அதனை மறைத்து மோசடியாக பல மனுக்களை தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

இந்த நிறைவேற்று மனுவில் மறுபடியும் இடைமனு எண்.153/2017 மனுவை தாக்கல் செய்து நீதிமன்ற தீர்ப்பை நிறைவேற்ற விடாமல் தொடர்ச்சியாக மனுதாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அகஸ்தீஸ்வரம் கிராமம் சர்வே எண்.9/79 ல் எனக்கோ என் குடும்பத்தினருக்கோ சொத்து இல்லை என்றால் அந்த சர்வே எண் குறித்து எனக்கு தெரியாது. என்.எம்.சி எண்.9/11-37 என்ற சொத்து குறித்து எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரி. நிறைவேற்று மனு சொத்தை சுற்றி எனக்கு ஏதாவது சொத்துக்கள் பாத்தியம் உள்ளதா என்றால் இல்லை சிறிது துாரத்தில் 10 அடி தள்ளி கிழக்கு திசையில் பிரதான சாலையை ஒட்டி உள்ளது. என்னுடைய சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. என்னுடைய சொத்திற்கு பட்டா உள்ளதா என்றால் என் அம்மா பெயரில் இருக்கும்.

எனது அம்மா அ.வ.எண்.508/1990 என்ற வழக்கை இந்த நிறைவேற்று மனுவின் மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த சொத்தில் நிறைவேற்று மனு சொத்தை புறம்போக்கு சொத்து என்று குறிப்பிட்டுள்ளார் என்றாலும் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் எனக்கு தெரியாது. அந்த தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு வழக்கு எண்.945/2001 மற்றும் சி.ஆர்.பி.2758/2001 ஆகிய

வழக்குகளை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததில் அ.வ.எண்.319/1982, நிறைவேற்று மனு எண்.32/88 ஆகியவற்றை சேர்த்து பொதுவான உத்தரவு 20.06.2011 ல் பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த பொதுவான உத்தரவில் நான் 3 வது மனுதாரர் என்றால் எனக்கு தெரியாது.

நிறைவேற்று இடைமனு எண்.147/99 ல் பிறப்பித்த உத்தரவில் பக்கம் 6 ல் 8 வது பத்தியில் நான் ஏற்கனவே அ.வ.எண்.508/90 ல் சாட்சியம் அளித்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நிறைவேற்று மனு சொத்தும் ராஜாவின் சொத்தும் வேறு வேறு என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் ராஜாவின் கிரய பத்திரத்தின் அடிப்படையில் சொல்கிறேன். அ.வ.எண்.319/82 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்ற எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரி. ம.சா.1 கிரய ஆவணத்திலுள்ள சொத்து விவரத்திற்கும் அ.வ.எண்.319/82 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையில் உள்ள சொத்து விவரத்திற்கும் என்ன வித்தியாசம் என்றால் தீர்ப்பாணையில் கிழக்கு எல்கையில் தெரு என்று உள்ளது ஆனால் அது வீடாகும். நான்கு எல்கைகள் அனைத்துமே முரண்பாடாக உள்ளது.

சாட்சி தற்போது கிழக்கு எல்கையில் தெரு என்று தவறாக விலை ஆவணத்திலும் தீர்ப்பாணையிலும் உள்ளது விலை ஆவணமே போலியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் ஆகும். கிரய ஆவணத்தில் உள்ள சொத்திற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரி. என் அப்பாவுக்கு ராஜாவிற்கு கிரயம் கொடுத்த லட்சுமணன் 10 க்கு 16 அடி அளவுள்ள ஓலை வேய்ந்த கட்டிடத்தில் தாமசிக்க அனுமதி கொடுத்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த கட்டிடத்தின் என்.எம்.சி எண்.9/11-37 என்றால் தெரியாது. அந்த கட்டிடமானது ராஜா கிரயம் பெற்ற 2 சென்ட் இடத்திற்குள் உள்ளது என்றால் தெரியாது.

லட்சுமணனிடம் இருந்து ராஜா 3 பத்திரத்தின் வாயிலாக 5 சென்ட் இடத்தை கிரயம் வாங்கினார் என்றால் தெரியாது. எதுவும் தெரியாமல் பல மனுக்கள் தாக்கல் செய்து நீதிமன்ற உத்தரவை செயல்படுத்த விடாமல் தடுத்து கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா லட்சுமணனுக்கு வாடகை கொடுத்து கொண்டு இருந்தார் என்றால் தெரியாது. நான் தற்போது நாகராஜா கோவிலுக்கருகில் குடியிருக்கிறேன். எனது அடையாள அட்டைகள் அனைத்தும் மேற்படி முகவரியில் தான் உள்ளது. எனது குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை ஆகியவற்றை ஆதாரமாக தாக்கல் செய்யமுடியுமா என்றால்

முடியும். எனது நிருபண வாக்குமூலத்தில் பரதர் தெரு என்று வேறு முகவரி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். பரதர் தெருவில் நான் தற்போது குடியிருக்கவில்லை என்றால் சரி.

நிறைவேற்று மனுவை சொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையயும் இல்லை என்றாலும் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்க எந்த தகுதியும் இல்லை என்றாலும் சரியல்ல.